1974 மார்ச் 15]

மாண்புமிகு. திரு ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இத்திட்ட பணிகள் மத்திய நீர் மற்றும் மின் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலும் அரசின் அனுமதியும் கிடைத்த பின்னர் துவங்கப் படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, ஈரோடு நிர்வாகப் பொறியாளர் அவர்கள் வலையம்பாளையத்திற்கருகில் நீர்த்தேக்கம் கட்டினால் சுமார் 5,000 எக்கர்களில் பயன் கிடைக்கும் என்பதாக நொய்யல் ஆற்று திட்டம் பற்றி தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார் கள். இது குறித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நொய்யல் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டி தண்ணீரை வலைபம்பாளையம் அருகில் நீர்த்தேக்கம் அமைக்கலாம் என்று தயாரித்து அனுப்பப்பட்டது. ஆனால், தொப்பம்பட்டி நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த 7,000 எக்கர் ஆயக்கட்டை தற்போது செயலாக்கப்பட்டு வரும் புகளூர் கூட்டுறவு நீரேற்று திட்டத்தின் பாசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் தற் போது நீரேற்று திட்டத்தின்மூலம் பயனடையும் ஆயக்கட்டைத் தவிர்த்து, புதியதாக திட்டத்தை தயாரிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அது முடிந்த பிறகு அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

மானாமதுரை ஒன்றியத்திலிலுள்ள கண்மாய்கள்.

440. வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் கீழப்பசலைக் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATURE LIBRARY 24 DEC 1974 MADRAS

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரை ஊராட்சி ஒன்றி யத்திலுள்ள கீழப்பசலை என்ற கிராமத்தில் உள்ள கண்மாய் பெரிய கண்மாயாகும். அது நீண்ட நாட்களாக ஆழப்படுத்தப்படாமல் இருப்ப தால் விவசாயிகளுக்குப் போதுமான தண்ணீரைத் தேக்குவதற்கு வசதி யில்லாமலிருக்கிறது. எனவே அரசாங்கம் மீண்டும் இதைப் பரிசீலித்து அதை வெட்ட, மராமத்து செய்ய உத்தரவிடுமா என்று அறிய விரும்ப கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த கண்மாய் 1971–72-ல் மராமத்து செய்யப்பட்டது. இந்தக் கண்மாயை தூர் வாரும் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டால் ஏரியின் எதிர்வாயிலில் உள்ள நிலங்களின் சொந்தக்காரர்கள் பலத்த ஆட்சேபனை செய்வார்கள். ஆகவே, தூர் வாரும் வேலையை ஒத்தி வைத்து, தேவையில்லை என்று கருதி, மராமத்து மட்டும் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

*441. வின.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூர் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு த. சோனையா : தலைவரவர்களே, மானமதுரை ஊராட்சி ஒன்றியம் மிளகனூர் கண்மாய் அந்தப் பகுதியிலே பெரிய கண்மாயாகும். அந்தக் கண்மாய் ஏற்கெனவே ஜமீன்தார் காலத்தில் வெட்டப்பட்டது என்றும் அதற்குப்பிறகு அந்தக் கண்மாயை ஆழப்படுத்தவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அதை ஆழப்படுத்தினல் தீவிரத் திட்ட சாகுபடிக்கு ஏற்ப அதிகமான விளைச்சல் உண்டாகும். அதை மனதில் கொண்டு அதில் தீவிர முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தக் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஆனல் மராமத்து செய்ய மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலை நடந்து வருகிறது.

*442. வின.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானமதுரை ஊராட்சி ஒன்றியம், கட்டிக்குளம் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய கண்மாய் இராமநாதபுரம் கண்மாய். அதற்கு அடுத்தபடியாக உள்ள இரண்டாவது பெரிய கண்மாய் இந்த கட்டிக்குளம் கண்மாயாகும்.